பாதுகாப்பு கருதி, படிப்படியாக அனைத்து மின் கம்பிகளையும் மேல்நிலையில், வான்வழியில் செல்கின்ற அனைத்து மின் கம்பிகளையும், புதைவடங்களாக மாற்றுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு துரித நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்—தொடர்ச்சி

திரு. மீ.அ. வைதியலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதில்...*

திரு. மு.பெ. சாமிநாதன்: *தலைவரவர்களே...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவையெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன.*

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன்.*

திரு. கே.என். இலட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து மூன்று மற்றும் இருநூற்று அறுபத்து நான்கு ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மனுக்கள் குழுவின் நூற்று ஐந்து முதல் நூற்று எட்டு வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*